# வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கப் பொது வழிகாட்டல்களும் பரிந்துரைகளும்

ஜூன் 2026

## அறிமுகம்

இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் வாழ்வதற்கான அடிப்படை உரிமையினையும் கௌரவத்துக்கான அடிப்படை உரிமையினையும் கொண்டுள்ளனர். இந்த உரிமையானது, தொழில் செய்வதற்கான உரிமை மற்றும் தொழிலின் சாதகமான நிலைமைக்கான உரிமை, போதிய வாழ்க்கைத் தரத்துக்கான உரிமை, விருத்திக்கான உரிமை உள்ளடங்கலாக வாழ்வின் ஒவ்வொரு அம்சத்துக்கும் நீட்சியடைகின்றது. மனித உரிமைகளை அர்த்தபூர்வமாக மதிப்பதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் மாத்திரமல்லாது பிரசைகள் ஒவ்வொருவரும் கடமைப் பொறுப்பினைக் கொண்டுள்ள அணுகுமுறையினையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது. எனவே, மனித உரிமைகளை மதிப்பதற்கான அரசின் கடமையினைப் போன்று ஆட்களதும் சமுதாயங்களதும் உரிமைகளை அரச சார்பற்ற செயற்படுனர்கள் அவர்களின் செல்வாக்குப் பரப்பினுள் மதித்துப் பாதுகாப்பதற்கும் அவற்றின் செயற்பாடுகளின் காரணமாக மனித உரிமைகள் மீறப்படுகையில் அவற்றிற்குப் பரிகாரம் காண்பதற்கும் பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மனித உரிமைகள் நியமங்களுக்கு இயைபுறும் வகையில் தங்களின் குறிக்கோள்களை அடைவதற்கான ஆற்றலை வியாபாரங்கள் கொண்டுள்ளன என்பதையும் ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. மேலும், அரச சார்பற்ற செயற்படுனர்களால் மக்களின் உரிமைகள் மீறப்படுவதில் இருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் அவ்வாறான மீறல்களுக்கான செயற்றிறன்மிக்க பரிகாரங்களை மேம்படுத்துவதற்கும் அரசு விசேட பொறுப்பினைக் கொண்டுள்ளது.

வியாபாரங்களின் கொள்கைகள் மற்றும் இயக்கங்களினுள் அடிப்படை மனித உரிமைகள் நியமங்களை ஒருங்கிணைப்பதற்காக இலங்கையில் வியாபாரங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வியாபாரங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தப் பொதுவான வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது. வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய ஐநா வழிகாட்டல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த வழிகாட்டல்கள் வியாபாரங்களின் மத்தியில் மனித உரிமைகள் இயைபுறலை மேம்படுத்துகையில் சம்பந்தப்பட்ட அரச அதிகார அமைப்புக்களுக்கு உசாவல்களின் தெளிவான சட்டகத்தினை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த வழிகாட்டல்கள் குறைநிரப்புகின்றனவேயன்றி ஏற்கனவே உள்ள எவ்விதமான குறிப்பிட்ட தொழிற்துறைக் கோவைகளையோ அல்லது நியமங்களையோ பதிலீடு செய்யவில்லை. இவ்வாறான துறைக்கெனத் தனித்துவமான கோவைகளும் நியமங்களும் இருக்கையில், அவ்வாறான கோவைகளுக்கும் நியமங்களுக்கும் இயைபுற்றுள்ள வியாபாரங்கள் தொடர்ந்தும் அவற்றுக்கு இயைபுற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன

## 1. வியாபாரங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் அரசின் கடப்பாடுகள்

1.1. அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மதிப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் சகல பிரிவுகளின் மூலமாகவும் அரசானது அரசியலமைப்பு ரீதியான ஒரு கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அரசானது மனித உரிமைகளின் கீழும் அத்துடன் அது ஏற்று அங்கீகரித்துள்ள ஏனைய உடன்படிக்கைகளின் கீழும் கொண்டுள்ள அதன் சர்வதேச கடப்பாடுகளுக்கும் செயலூக்கமளிக்க வேண்டும்.

1.2. அரசானது அரசுகளுடன் அல்லது வியாபாரங்களுடன் சர்வதேச உறவுகளில் ஈடுபடுவது மற்றும் இரு தரப்பு அல்லது பல்தரப்புப் பொருத்தனைகள் அல்லது ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது உள்ளடங்கலாக அரசின் சகல பிரிவுகளும் இந்த மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும். அரசின் மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் முரண்படுகின்ற அல்லது இந்தக் கடப்பாடுகளை உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் மதிப்பதற்கான அரசின் ஆற்றலைப் பாதிக்கின்ற எவ்விதமான பொருத்தனைகளிலும் அல்லது ஒப்பந்தங்களிலும் அரசு ஈடுபடக்கூடாது.

1.3. அரசு ஒழுங்குறுத்தும் நிறுவனங்களால், குறிப்பாக, அரச சார்பற்ற செயற்படுனர்களால் அல்லது தனியார் துறைச் செயற்படுனர்களால் மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் போதிய அளவு மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன என்பதை ஒழுங்குறுத்தும் வகிபாத்திரத்தினை வகிக்கின்ற அரசின் பிரிவுகள் கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும். உரிமங்களையும் அனுமதிகளையும் (நிலவரத்திற்கேற்ப) வழங்குகின்ற மற்றும் புதுப்பிக்கின்ற செயன்முறையினுள் இவை உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான அங்கீகாரங்களுடன் இயைபுறுவதைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து கண்காணிப்பதில் ஈடுபடும் செயன்முறையிலும் உள்வாங்கப்பட வேண்டும்.

1.4. அரசுக்குத் சொந்தமான நிறுவனங்கள் அவை அரசுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாகவும் அவை அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற காரணத்தினாலும் அடிப்படை உரிமைகளை மதித்து, அவற்றினைப் பெற்றுக்கொடுத்து, அவற்றினை மேம்படுத்துவதற்கான நேரடிக் கடப்பாட்டினைக் கொண்டுள்ளன. அரசுக்குச் சொந்தமான சகல தொழில்முனைவுகளும் கீழே வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இயைபுறுகின்றன என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். எந்தெந்த அரச சார்பற்ற அமைப்புக்களுடன் அரசுக்குச் சொந்தமான தொழில்முனைவுகள் வியாபாரங்களைக் கொண்டுள்ளனவோ அல்லது தொடர்புகளைக் கொண்டுள்ளனவோ அந்த அமைப்புக்கள் இந்தக் கடப்பாடுகளுக்கு இயைபுறுகின்றனவா என்பதையும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மதிப்பிட வேண்டும். இவ்வாறான அமைப்புக்கள்

இயைபுறாதிருக்கலாம் என்கையில், இயைபுறலை ஊக்குவிப்பதற்கு அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் மூலமாகத் தாம் கொண்டுள்ள அனுகூலத்தினைப் பயன்படுத்த வேண்டும்.

1.5. அரசாங்கம் எந்தெந்த வியாபாரங்களை நடத்துகின்றதோ அந்த நிறுவனங்கள் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இயைபுறுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை அரசு கொண்டுள்ளது. இந்தப் பொறுப்பு அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் அரசின் கொள்ளவனவுச் செயன்முறையினையும் கொடை வழங்கலையும் அல்லது வியாபாரங்களுக்கான ஏனைய நிதிசார் அல்லது நிதிசாரா உதவியினையும்உள்ளடக்குகின்றது. இதனால், மனித உரிமைகளை மீறக்கூடிய அமைப்புக்களுக்கு அரச நிதி பயன்படுத்தப்படாது.

1.6. இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றினைத் தடுப்பது தொடர்பில் அரசு கொண்டுள்ள நியதிச்சட்டக் கடப்பாடுகளையும் சர்வதேசக் கடப்பாடுகளையும் அது மனதிற்கொண்டு ஊழலுக்கும் மனித உரிமைகள் மீறலுக்கும் இடையிலான இணைப்பினை அடையாளம் காணவேண்டும். 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் உள்ளடங்கலாக ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் இறுக்கமாக அமுலாக்கப்படுகின்றன என்பதை அரசு கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் சகல அரசாங்க நிறுவனங்களும் சட்டத்திற்கு அமைவாக அவற்றின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஊழலைத் தடுத்து அவற்றினை முறைப்பாடு செய்வதற்கான பொறிமுறைகளைக் கொண்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

## 2. மனித உரிமைகளுக்கானஅரச கடப்பாடு

2.1. ஒவ்வொரு வியாபாரமும், அவை கூட்டிணைக்கப்பட்டதாகவோ அல்லது கூட்டிணைக்கப்படாததாகவோ இருந்தாலும், இலங்கை அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை மதிப்பதற்கும் பிரதான மனித உரிமைகள் பொருத்தனைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை மதிப்பதற்கும் இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ள சர்வதேச தொழில் அமைப்பின் சமவாயங்களை மதிப்பதற்கும் பகிரங்கமாகக் கடப்பாடு கொள்ள வேண்டும். இவ்வாறான கடப்பாடு ஒரு கொள்கைக் கூற்றின் வடிவில் இருக்கலாம், அது: வியாபாரத் தொழில்முனைவின் மிகவும் சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது; சம்பந்தப்பட்ட உள்நிலையான மற்றும் புறநிலையான நிபுணத்துவத்தில் இருந்து உள்ளீடுகளைப் பெறுகின்றது; இந்தத் தொழில்முனைவுகளின் இயக்கங்களுடன் உற்பத்திகளுடன் அல்லது சேவைகளுடன் நேரடியாகத் தொடர்புற்றுள்ள ஆளணியினரின் வியாபாரப் பங்காளர்களின் மற்றும் ஏனைய தரப்பினர்கள் தொடர்பில் தொழில்முனைவு கொண்டுள்ள மனித உரிமைகளைக் குறித்துரைக்கின்றது; இது பகிரங்கமாகக் கிடைக்கப்பெறுவதுடன் சகல ஆளணியினருக்கும் வியாபாபரப் பங்காளர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் உள்நிலையாகவும் புறநிலையாகவும்

அறிவிக்கப்படலாம்; வியாபாரத் தொழில்முனைவு மூலமாகப் பொதியவைப்பதற்கு அவசியமான இயக்கக் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் பிரதிபலிக்கின்றது.

2.2. ஒவ்வொரு வியாபாரமும் அதன் உபாயமார்க்கத் திட்டங்களிலும் கொள்கைகளிலும் அதன் ஒப்பந்தங்களிலும் மனித உரிமைகளை மதிப்பதற்குக் குறிப்பாகக் கடப்பாடு கொண்டுள்ள தொடர்புடைய வாசகங்களைக் கட்டாயம் உள்ளடக்க வேண்டும்.

2.3. வியாபாரங்களின் சிரேஷ்ட தலைமைத்துவம் அவற்றின் பொது ஈடுபாடுகளில் மனித உரிமைகளைக் குறிப்பீடு செய்து மேம்படுத்தும் மொழியினைக் கிரமமாக ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறான மொழி ஆட்களின் கௌரவத்தினை மதிப்பதையும் கௌரவமான வேலைச் சூழலை வழங்குவதையும் சுற்றாடலைப் பாதுகாப்பதையும் சம்பந்தப்படுத்தலாம்.

## 3. மனித உரிமைகளை மதிப்பதற்கான பொறுப்பு

3.1. ஒவ்வொரு வியாபாரமும் சகல சந்தரப்பங்களிலும் அதன் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களின் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையினை மதிக்கவேண்டும்.

3.2. எந்தவொரு வியாபாரமும் ஆட்களை வஞ்சக் கடத்தல் செய்தலை, அடிமைத்தொழிலை, சித்திரவதையினை, குரூரமாக, மனிதாபிமானமில்லாது அல்லது அவமானத்துடன் நடத்துவதை, தன்னிச்சையான கைதுகளை அல்லது தன்னிச்சையான தடுத்துவைப்புக்களைத் தூண்டக் கூடாது அவற்றில் பங்குபற்றக் கூடாது அல்லது அவற்றுக்கு ஆதரவளிக்கக் கூடாது.

3.3. எந்தவொரு வியாபாரமும் அதன் ஊழியர்களின் வாடிக்கையாளர்களின் அல்லது பொதுமக்களின் சுகாதாரத்துக்கான, கல்விக்கான அல்லது வீடமைப்புக்கான உரிமைகளை மீறும் எவ்விதமான செயற்பாடுகளிலும் அல்லது நடைமுறைகளிலும் ஈடுபடக் கூடாது

3.4. எந்தவொரு வியாபாரமும் அதன் வாடிக்கையாளர்களுக்குப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குகையில் வம்சம், இனத்துவம், மொழி, சாதி, சமயம், பால், பால்நிலை, பாலியல் நாட்டம், அங்கவீனம், அரசியல் நாட்டம், பிறந்த இடம் அல்லது இவை போன்ற காரணங்களின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது. குறிப்பாக, இவ்வாறான பாகுபாடுமிக்க காரணங்களின் அடிப்படையில் எந்தவொரு நபருக்கும் கடைகள், உணவு விடுதிகள், ஹோட்டல்கள் மற்றும் பொதுக் களியாட்டங்கள் என்பன அணுகலை

மறுக்காதிருப்பதற்கான நேரடியான அரசியலமைப்பு ரீதியான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன.

3.5. ஒவ்வொரு வியாபாரமும் அதன் ஊழியர்கள் உள்ளிட்ட நபர்களின் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம், சமயம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான மற்றும் சங்கமைப்பதற்கான சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும்.

3.6. ஒவ்வொரு வியாபாரமும் அணுகத்தக்க வசதிகள் மற்றும் தொடர்பாடல் உள்ளடங்கலாக ஆட்களுக்கு நியாயமாக இடமளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகையில் அங்கவீனம் அல்லது சுகாதார நிலைமைகள் என்பவற்றின் அடிப்படையில் வித்தியாசமாக நடத்துவது என்பது, நியாயமாக இடமளிப்பது வியாபாரத்தில் தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்தலாம் எனும் அளவுக்கு மாத்திரமே இருக்கவேண்டும்.

3.7. எந்தவொரு வியாபாரமும் வம்சம், இனத்துவம், மொழி, சாதி, சமயம், பால், பால்நிலை, பாலியல் நாட்டம், அரசியல் நாட்டம், பிறந்த இடம் அல்லது இவை போன்ற காரணங்களின் அடிப்படையில் வெறுப்பினை ஊக்குவிப்பதில் ஈடுபடக்கூடாது அல்லது அறிந்துகொண்டெ அதை வசதிப்படுத்தக் கூடாது. எந்தவொரு வியாபாரமும் வன்முறையில் ஈடுபடக்கூடாது அல்லது அறிந்துகொண்டே வன்முறையினைத் தூண்டக் கூடாது.

3.8. தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வியாபாரம் உள்ளடங்கலாக ஒவ்வொரு வியாபாரமும் வன்முறையினைத் தூண்டுவதைப் பரப்புவதையும் வெறுப்புப் பேச்சினைத் தூண்டுவதைப் பரப்புவதையும் தவறான தகவல்களைப் பரப்புவதையும் தடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுள் தெளிவான சமுதாய நியமங்களையும் செயற்றிறன்மிக்க முறைப்பாட்டுப் பொறிமுறைகளையும் செயற்றிறன்மிக்க உள்ளடக்கக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளையும் ஏற்று நடைமுறைப்படுத்தல் ஆகியன உள்ளடங்குகின்றன.

3.9. அரச சார்பற்ற துறைகளினுள் நடைபெறும் மோசடிமிக்க நடைமுறைகள் மனித உரிமைகள் மீறலுக்கு இட்டுச்செல்லலாம் என்பதை ஒவ்வொரு வியாபாரமும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, ஒவ்வொரு வியாபாரமும் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்குப் பூரணமாக இயைபுறவேண்டும்.

3.10. ஒவ்வொரு வியாபாரமும் சகல ஆட்களினதும் அந்தரங்கத்துக்கான உரிமையினையும் இந்தச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரவு விடயங்களின் உரிமைகளையும் மதிக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு வியாபாரமும் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்திற்குப் பூரணமாக இயைபுற வேண்டும்.

3.11. சட்டத்தினால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டு, சட்டம் அங்கீகரிக்கும் ஒரு நியாயமான நோக்கத்தை அடைவதற்கான அவசியமான மற்றும் விகிதாசார அளவிலான வழியாக இருக்கும்போது மட்டுமே, ஒரு வணிக நிறுவனம் தனது ஊழியர்களின் எந்தவொரு உரிமையையும் கட்டுப்படுத்தலாம். இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு முன்னர், பாதிக்கப்பட்ட ஊழியர்களுடன் கலந்தாலோசிப்பதும் மற்றும் மிக உயர்ந்த மட்டத்தில் உரிய ஆலோசனைகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

## 4. கௌரவமான வேலை

4.1. ஒவ்வொரு வியாபாரமும் இலங்கையில் தொழில்வாய்ப்புத் தொடர்பான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டாயம் இயைபுறவேண்டும். இது, போதிய ஊதியம் தொடர்பான, வேலை மணித்தியாலங்கள் தொடர்பான, சமூகப் பாதுகாப்புத் தொடர்பான, விடுமுறை மற்றும் ஓய்வு தொடர்பான, பிரசவ விடுப்பு மற்றும் பெற்றோருக்கான விடுப்பு உள்ளிட்ட விடுப்புத் தொடர்பான, வேலை நிலைமைகள் தொடர்பான மற்றும் பாதுகாப்பு நியமங்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்றது என்பதுடன் இச்சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையல்ல.

4.2. எந்தவொரு வியாபாரமும் பலவந்த ஊழியம் அல்லது அடிமை முறை என்பவற்றுக்கு நிகரான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் அல்லது தொழில் நடைமுறைகளில் ஈடுபடக்கூடாது.

4.3. எந்தவொரு வியாபாரமும் சிறார் ஊழியத்திற்கு நிகரான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் அல்லது தொழில் நடைமுறைகளில் ஈடுபடக் கூடாது. ஒவ்வொரு வியாபாரமும் ஆட்சேர்ப்புக்கு முன்னர் விண்ணப்பதாரியின் வயதினைப் பரிசீலிப்பதற்கான போதிய நடவடிக்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும்.

4.4. எந்தவொரு வியாபாரமும் வம்சம், இனத்துவம், மொழி, சாதி, சமயம், பால், பால்நிலை, பாலியல் நாட்டம், அரசியல் நாட்டம், பிறந்த இடம் அல்லது இவை போன்ற காரணங்களுக்கு நிகரானவற்றின் அடிப்படையில் அமைந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் அல்லது தொழில் நடைமுறைகளில் ஈடுபடக் கூடாது.

4.5. எந்தவொரு வியாபாரமும் அங்கவீனத்தின் அடிப்படையில் பாகுபாடாக அமையக்கூடிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் அல்லது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அங்கவீனத்தின் அடிப்படையில் அல்லது சுகாதார நிலைமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பின் போது அல்லது தொழிலின் போது வித்தியாசமாக நடத்துவது என்பது, ஒரு நபரினால் குறிப்பிட்ட அங்கவீனத்துடன் அல்லது சுகாதார

நிலைமையுடன் குறிப்பிட்ட ஒரு தொழில் வகிபாகத்தினை நியாயமான முறையில் நிறைவேற்ற முடியாது என்ற அளவுக்கு மாத்திரம் உட்பட்டதாக மாத்திரமே இருக்க வேண்டும் அல்லது அவ்வாறு நியாயமாக இடமளிப்பது வியாபாரத்தில் தேவையற்ற சிரமத்தினை ஏற்படுத்தும் என்கின்ற அளவுக்கு மாத்திரம் உட்பட்டதாக மாத்திரமே இருக்க வேண்டும்.

4.6. ஒவ்வொரு வியாபாரமும் வேலைத்தளத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினையும் பாலியல் துன்புறுத்தலையும் தடுப்பதற்கான போதிய நடைமுறை ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் முகாமையாளர்களுக்கும் வேலையாட்களுக்கும் பயிற்சியளித்தல், தேவைப்படும் உள்ளகக் கொள்கைகளைக் கொண்டிருத்தல், இரகசியமான அறிக்கையிடல் செயன்முறைகள் மற்றும் செயற்றிறன்மிக்க பரிகாரங்களை கொண்டிருத்தல் என்பவற்றினை உள்ளடக்கலாம்.

4.7. ஒவ்வொரு வியாபாரமும் அரசியலமைப்பின் 14(1)(எ) எனும் உறுப்புரையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சட்டபூர்வமான தொழிலில் ஈடுபடுவதற்கான அதன் ஊழியர்களின் சுதந்திரத்தினை மதிக்கவேண்டும்.

4.8. ஒவ்வொரு வியாபாரமும் அரசியலமைப்பின் 14(1) )(இ) எனும் உறுப்புரையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள, சங்கமைப்பதற்கான அதன் ஊழியர்களின் சுதந்திரத்தினையும் தொழிற்சங்கமைப்பதற்கான அல்லது தொழிற்சங்கத்தில் சேர்வதற்கான அதன் ஊழியர்களின் சுதந்திரத்தினையும் மதிக்கவேண்டும்.

4.9. ஒழுங்குமுறையான வேலைவாய்ப்பைக் கொண்டிருக்காவிட்டாலும், வணிகத்தின் செயல்பாட்டிற்கு பங்களிக்கும் வகையில் எந்தவொரு வடிவத்திலும் சேவை அல்லது உழைப்பை வழங்கும் அனைத்து நபர்களுக்கும் இந்தக் கொள்கைகள் நீட்டிக்கப்பட வேண்டும்.

## 5. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி

5.1. ஒவ்வொரு வியாபாரமும் சுற்றாடலைப் பாதுகாத்தல் உள்ளடங்கலாக நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான சகல சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைபுறவேண்டும். குறிப்பாக, சகல இயக்கங்களும், சமுத்திரம், நீர், மண், உயிரியல் பல்வகைமை, மற்றும் காலநிலை என்பவற்றுடன் தொடர்புற்று சுற்றாடலுக்கு ஏற்படும் அபாயநேர்வு தொடர்பில் மதிப்பிடப்படுகின்றன என்பதை வியாபாரங்கள் உறுதிப்படுத்த வேண்டும். வியாபாரங்கள் சுற்றாடல் தீங்கினைத் தவிர்த்தலுக்கு முன்னுரிமையளித்து, அவ்வாறான தீங்கின் தன்மை மற்றும் அளவு என்பன நிச்சயமற்றதாக இருக்கையில் அதற்காக முன்னெச்சரிக்கைமிக்க அணுகுமுறையினைக் கைக்கொள்ள வேண்டும்.

தீங்கு தவிர்க்க முடியாததாக இருக்கையில், தீங்கினைக் குறைப்பதற்கும் சுற்றாடலைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் சமுதாயங்களுக்கும் நட்டஈட்டினை வழங்குவதற்கும் தணிப்பு உபாயமார்க்கங்கள் ஏற்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

5.2. வியாபாரங்கள், ஒழுங்குவிதிகள் தொடர்பான அவற்றின் ஆதரவு திரட்டல் நடைமுறைகள் தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவேண்டும். குறிப்பாக, குறிப்பிட்ட பிரதேசங்களை அல்லது செயற்பாடுகளை மீளொழுங்குறுத்துமாறு அரசாங்கத்திடம் வர்த்தகச் செயற்பாடுகளுக்காகப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களையும் சுற்றாடல் ரீதியாக எளிதில் பாதிப்படையக்கூடிய பிரதேசங்களையும் பயன்படுத்துவது தொடர்பில் பரப்புரை செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானங்களில் சம்பந்தப்படும் சாத்தியமான சுற்றாடல் தாக்கங்கள் பற்றி அவை அவதானமாக இருக்கவேண்டும். (உதாரணமாக: வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பாதுகாப்பு வலயங்களைத் திறக்குமாறு பரப்புரை செய்வதில்).

5.3. இயற்கை வளங்களைப் பிரித்தெடுத்தல் சம்பந்தப்படும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் உள்ளிட்ட ஒவ்வொரு வியாபாரமும் அவற்றின் செயற்பாடுகளின் சுற்றாடல் ரீதியான நிலைபேறானதன்மையினை உறுதிப்படுத்த வேண்டும்.

5.4. காணி, வாழ்வாதாரங்கள் அல்லது கலாசாரப் பாரம்பரியம் ஆகியவற்றினைப் பாதிக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கும் ஒவ்வொரு வியாபாரமும் பாதிக்கப்படும் நபர்களதும் சமுதாயங்களதும் முற்கூட்டிய மற்றும் அறிந்து வழங்கப்பட்ட இணக்கத்தினை உறுதிப்படுத்த வேண்டும்.

## 6. மனித உரிமைகள் தாக்கத்தினைத் தடுப்பதற்கான அல்லது தணிப்பதற்கான பொறுப்பு

6.1. ஒவ்வொரு வியாபாரமும் அதன் இயக்கங்களின் வழியே ஏற்படும் உண்மையான மற்றும் ஏற்படும் சாத்தியமுள்ள மோசமான மனித உரிமைகள் தாக்கத்தினை அடையாளம் கண்டு, தடுத்து, தணித்து அவை ஏற்படுவதற்கான காரணத்தினை விளக்குவதற்கு போதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள், ஊழியம், பால்நிலை, சிறார்கள், அங்கவீனம், மற்றும் சுற்றாடல் உள்ளிட்ட பல்வேறு பரப்புக்களில் ஏற்படும் செயற்பாட்டின் தாக்கத்தினை மதிப்பிடும் மனித உரிமைகள் பற்றிய சிரத்தைமிக்க ஆய்வுச் (HRRD) செயற்பாட்டு வடிவில் இருக்கலாம். வியாபாரங்கள் இவ்வாறான மதிப்பீட்டினை கிரமமான அடிப்படையில் பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன் தொழில்நுட்ப விருத்தி மற்றும் சர்வதேச மற்றும் ஒப்பீட்டு ரீதியான மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு ஈடாகுவதற்காக அவற்றின் மதிப்பீட்டுச் செயன்முறைகளை இற்றைப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

6.2. ஒவ்வொரு வியாபாரமும், HRDD இலிருந்து கண்டறிந்தவைகள், கொள்கைகள், இயக்கங்கள் மற்றும் விநியோகச் சங்கிலிகள் என்பவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

6.3. ஒவ்வொரு வியாபாரமும் இவ்வாறு கண்டறிந்தவைகளுக்கான அவற்றின் பதிற்செயற்பாட்டின் செயற்திறனைப் பின்தொடர்ந்து கவனிக்கவேண்டும். இதில் உள்நிலையான மற்றும் புறநிலையான மூலங்களில் இருந்து பெற்ற பின்னூட்டல்களில் இருந்து உள்ளீடுகளைப் பெறுவது உள்ளடங்குகின்றது.

6.4. ஒவ்வொரு வியாபாரமும் அதன் HRDD மதிப்பீடுகளின் முறையியலையும் அவற்றில் இருந்து கண்டறிந்தவைகளையும் பொருத்தமான முறையில் தெரியப்படுத்த வேண்டும். உதாரணமாக அதன் வருடாந்த அறிக்கைகள் மூலமாக அல்லது அதன் இணையத்தளங்கள் மூலமாகத் தெரியப்படுத்த வேண்டும். அந்தரங்கம், வர்த்தக ரீதியான இரகசியத்தன்மை என்பவை மதிக்கப்பட வேண்டும்.

6.5. ஒவ்வொரு வியாபாரமும் HRDD செயற்பாடுகளில், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளையும் சிவில் சமூகத்தினையும் தொழிற் சங்கங்களையும் பாதிக்கப்பட்ட சமுதாயங்களையும் சுயாதீனமான நிபுணர்களையும் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்த வேண்டும். வியாபாரங்கள் அவை மனித உரிமைகளுக்கு மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன அல்லது மோசமான தாக்கங்களுக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன என அடையாளம் கண்டு அல்லது சந்தேகித்து அவ்வாறான தாக்கங்களுக்கு பரிகாரம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க நாடுவதே குறிப்பாக இந்த நிலைமையாகும்.

6.6. ஒவ்வொரு வியாபாரமும் அதன் நடவடிக்கைகள் மூலம் மோசமான மனித உரிமைகள் தாக்கத்தினை ஏற்படுத்துவதை அல்லது அவற்றுக்குப் பங்களிப்பு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு வியாபாரமும் அதன் இயக்கங்கள், விநியோகச் சங்கிலிகள், உற்பத்திகள், அல்லது சேவைகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புற்றுள்ள மனித உரிமைகள் தாக்கங்களை, அவை அந்தத் தாக்கங்களுக்குப் பங்களிப்பு வழங்கியிராத போதிலும் கூட, அவற்றின் வியாபார உறவுகள் மூலம் தடுப்பதற்கு அல்லது தணிப்பதற்கு நாட வேண்டும்.

6.7. அவசியமானவிடத்து, உண்மையான மற்றும் ஏற்படும் சாத்தியமுள்ள மோசமான மனித உரிமைகள் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கு வியாபாரங்கள் நடவடிக்கைகள் எடுப்பதை முன்னுரிமைப்படுத்த வேண்டும். மிகவும் தீவிரமான, தாமதமான பதிற்செயற்பாடு பரிகாரம் காண்பதையே சாத்தியமற்றதாக்குகின்ற தாக்கங்களைத் தடுப்பதற்கும் தணிப்பதற்குமே வியாபாரங்கள் முதலில் முன்வர வேண்டும்.

## 7. பரிகாரங்களுக்கான அணுகல்

7.1. மோசமான மனித உரிமைகள் தாக்கங்களுக்கு ஒரு வியாபாரம் காரணமாகியுள்ளது அல்லது பங்களிப்புச் செய்துள்ளது என அடையாளம் கண்டால், சட்டபூர்வமான செயன்முறைகள் மூலம் போதிய மற்றும் செயற்றிறன்மிக்க பரிகாரத்திற்கான ஏற்பாட்டினை வழங்கவேண்டும் அல்லது அவ்வாறான ஏற்பாட்டுடன் ஒத்துழைக்க வேண்டும்.

7.2. ஒவ்வொரு வியாபாரமும் அதன் வியாபார நடவடிக்கைகள் மூலம் மனித உரிமைகளை மீறியமை அல்லது மீறக்கூடியமை தொடர்பில் முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் விசாரணை செய்வதற்கும் பரிகாரம் காண்பதற்கும் உள்நிலையான குறை தீர்த்தல் பொறிமுறைகளை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பொறிமுறைகள் சுயாதீனமானவையாகவும் சட்டபூர்வமானவையாகவும் அணுகத்தக்கவையாகவும் எதிர்வுகூறத்தக்கவையாகவும் ஒப்புரவையானவையாகவும் வெளிப்படைத்தன்மையுடையவையாகவும் உரிமைகளுடன் இயைபுறுபவையாகவும் தொடர்ச்சியான கற்றலுக்கான ஒரு மூலமாகவும் இருக்கவேண்டும். ஒரு பொறிமுறையினை உருவாக்குதல் அல்லது தழுவுதல் ஈடுபாட்டின் மூலமும் கலந்துரையாடல் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7.3. ஒவ்வொரு வியாபாரமும் நிறுவனத்தினுள் தவறுகளைத் தெரியப்படுத்துபவர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையினை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்பதுடன் மனித உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய மீறல்கள் அல்லது மோசமான தாக்கங்கள் பற்றி முறைப்பாடு செய்வதற்குச் சகல மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான கரிசனைகளை எழுப்பும் எந்தவொரு ஊழியருக்கும் எதிராக எந்த வியாபாரமும் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

7.4. ஒவ்வொரு வியாபாரமும் முறைப்பாடு செய்வதற்கான பொறிமுறைகளை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அவற்றின் மூலம் வியாபாரங்கள் இயங்குகின்ற சாதாரண தன்மையற்ற சேவை அல்லது ஊழியத்தினை வழங்குபவர்கள் உள்ளடங்கலாகப் பொதுமக்கள், சமுதாயங்கள் அல்லது ஏனைய பங்குதாரர்கள் மோசமான மனித உரிமைகள் தாக்கங்கள் தொடர்பான குறைபாடுகளை முறைப்பாடு செய்யலாம். இவ்வாறான பொறிமுறைகள் கட்டாயம் நம்பத்தகுந்தவையாகவும் நியாயமானவையாகவும் பக்கச்சார்பற்றவையாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் முறைப்பாடுகளை விசாரித்துச் செயன்முறைப்படுத்துவதற்கான ஒரு சுயாதீனமான அமைப்பின் ஈடுபாட்டினை உள்ளடக்க வேண்டும்.

7.5. வியாபாரங்களினால் ஏற்படும் மோசமான மனித உரிமைகள் தாக்கங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்து அவ்வாறான முறைப்பாடுகளை முன்னெடுப்பதற்குப் போதுமான அணுகலை நீதிமுறைப் பொறிமுறைகள் வழங்குகின்றன என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இந்தப் பொறுப்பானது பொலிஸ் முதல் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் வரையான சட்ட முறைமையின் ஒட்டுமொத்த இயந்திரத்தினையும் அதனைத் தொடர்ந்து வரும்

மேன்முறையீடுகளையும் உள்ளடக்குகின்றது. சகல மட்டங்களிலுமான நீதிமன்றங்களும் நியாயமன்றங்களும் அவற்றின் சம்பந்தப்பட்ட நியாயாதிக்கங்களுக்கான மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளின் பொருத்தப்பாட்டினை உணர்வதற்கும் அவ்வாறான கோரிக்கைகளை நியாயமான முறையிலும் துரிதமான முறையிலும் மதிப்பிட்டுத் தீர்ப்பு வழங்குவதற்கும் கட்டாயம் தயாராக இருக்கவேண்டும்.

7.6. எந்தவொரு வியாபாரமும் அதன் வியாபாரச் செயற்பாடுகள் பற்றிய நியாயமான குறைகளை அடக்குவதற்காகச் சட்ட ரீதியான உத்திகளை அல்லது ஏனைய உத்திகளைக் கைக்கொள்ளக் கூடாது அல்லது நீதிக்கான அணுகலையும் அர்த்தபூர்வமான பரிகாரத்துக்கான அணுகலையும் வேண்டுமென்றே அடக்கக் கூடாது.

## 8. பரிந்துரைகள்

அரச சார்பற்ற துறையில் மனித உரிமைகளுக்கான கௌரவத்தினை மேம்படுத்துவதற்கான அரசின் வகிபாத்திரத்தின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகள் இலங்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன:

**a. கைத்தொழில் அமைச்சு, தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, மற்றும் நீதி அமைச்சு உள்ளிட்ட மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அமைச்சுக்களூடாகச் சம்பந்தப்பட்ட கொள்கைகளுடன் இயைபுறும் வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய ஒரு தேசிய செயற்றிட்டத்தினை (NAP) உருவாக்கிப் பிரசுரித்தல்.**

**b. வன்முறை மற்றும் துன்புறுத்தல் சமவாயம், 2019 (இல 190), தொழில் பரிசீலனை (விவசாயம்) சமவாயம், 1969 (இல 129), தனிப்பட்ட தொழில் முகவர்கள் சமவாயம், 1997 (இல 181), பலவந்தத் தொழில் சமவாயத்திற்கான 2014 ஆம் ஆண்டின் மரபொழுங்கு, 1930 (P029) உள்ளிட்ட சர்வதேசத் தொழில் அமைப்பின் பிரதான சமவாயங்களை ஏற்று அங்கீகரித்தல்.**

**c. இந்த வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் ஒழுங்குறுத்தல் நிறுவனங்களினதும் அரசுக்குச் சொந்தமான தொழில்முனைவுகளதும் உரிமம் வழங்கல் மற்றும் அங்கீகாரச் செயன்முறைகள் மற்றும் வியாபார இயக்கங்களினுள் (பொருத்தமானவாறாக) ஏற்று அங்கீகரிப்பதன் மூலம் இந்த வழிகாட்டல்களுக்கும் பரிந்துரைகளுக்கும் செயலூக்கமளிப்பதற்காக இந்த அமைப்புக்களை நெறிப்படுத்தி ஊக்குவித்தல்.**

**d. மனித உரிமைப் பாதுகாவலர்களின் மனித உரிமைகளை மீறுகின்றமை உள்ளடங்கலாக மனித உரிமைகளை மீறுகின்ற வியாபாரங்களைத் தண்டிப்பதற்காகச் செயற்றிறன்மிக்க ஒழுங்குறுத்தல் பொறிமுறைகள் மூலமாக அரச சார்பற்ற துறையினுள் இந்த வழிகாட்டல்களினதும் பரிந்துரைகளினதும் அமுல்படுத்தலை ஊக்குவித்து வலுவான HRDD மற்றும் மனித உரிமைகள் இயைபுறலைக் கொண்ட வியாபாரங்களுக்கு வெகுமதியளித்தல்.**

**e. வியாபாரங்கள் உள்ளிட்ட அரச சார்பற்ற செயற்படுனர்களால் மனித உரிமைகள் மீறப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செயற்றிறன்மிக்க நீதிமுறை மற்றும் நிர்வாகப் பரிகாரங்களை வழங்குதல்.**

பின்வரும் பரிந்துரைகள் வியாபாரங்களுக்கும் அரச சார்பற்ற செயற்படுனர்களுக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன:

**f. பொருத்தமான கூற்றின் மூலம் இந்த வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளில் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் ஏற்று அங்கீகரித்து அவற்றுக்கு இயைபுறுவதற்குப் பகிரங்கமாகக் கடப்பாடு கொள்ளல்.**

g. **இந்த வழிகாட்டல்களுக்கும் பரிந்துரைகளுக்கும் செயலூக்கமளிப்பதற்காக போதிய வளங்களை ஒதுக்கி, உபாயமார்க்கமிக்க திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்கி அவற்றினை ஏற்று நடைமுறைப்படுத்தல் மற்றும் இந்தக் கொள்கைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இயைபுறுவது வியாபாரக் கலாசாரத்தினுள் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதை நோக்கிப் பணியாற்றல்.**